# வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம்

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2017/0002 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 2017-2020 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | தில்லைநாதன் கோபிநாத், நூலகம் நிறுவனம் |
| காலம் | ஆனி 2017 |
| பாதீடு | Rs, 25,00,000.00 |

## நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் ஆவணப்படுத்தி எண்ணிம வகையில் பாதுகாத்து அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபடும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆகும். சாதி, சமய, இனக் கட்டமைப்புக்கள், சமூகத்தில் நிலவிய ஆணாதிக்க செல்வாக்குக்கள், குடியேற்றவாத ஆட்சி போன்ற பல்வேறு காரணங்களால் பல்வேறு அறிவுத் தொகுதிகள் ஆவணப்படுத்தப்படவில்லை பேணப்படவில்லை. அண்மைக் காலத்தில் இடம் பெற்ற உள்நாட்டு யுத்தம், நவீன மயமாக்கம், போதிய அளவு விழிப்புண்ர்வு இன்மை போன்றவற்றாலும் பெறுமதிமிக்க அறிவு வளங்கள் இழக்கப்பட்டுள்ளன.

ஆவணப்படுத்தல், ஆவணகப்படுத்தல், அணுக்கப்படுத்தல் ஒரு சமூகத்தோடு நெருங்கிய தொடர்புடைய பணிகள் ஆகும். சமூகத்தில் இருக்கக் கூடிய அரசியல், அதிகார, பண்பாட்டு சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, முற்போக்கான ஒரு சட்டகத்தின் தனது பணிகளை முன்னெடுக்க நூலக நிறுவனம் உறுதிபூண்டுள்ளது. அந்த வகையில் கூடிய அழிவாபத்துக்கு உட்பட்ட, போதிய கவனிப்புக்கள் பெறாத, சமூகச் சூழ்நிலைகளால் புறக்கணிக்கப்பட்ட சேகரங்கள்

தொடர்பாக நூலக நிறுவனம் சிறப்புச் செயற்திட்டங்களை வடிவமைத்து முன்னெடுத்து வருகின்றது. அவ்வகையில் இதுவரை 34,000 க்கும் அதிக ஆவணங்களை நூலக நிறுவனம் பதிவு செய்துள்ளது.

## இலக்குகளும் நோக்கங்களும்

நூலக நிறுவனத்தின் ஊழியர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் நிறுவனத்தின் வாய்மொழி வரலாற்று நிலையம் தொடர்பான அறிமுகம்

- வாய்மொழி வரலாற்றுப் பதிவுகளை மேற்கொள்ளல், சேகரித்தல்
- வாய்மொழி வரலாற்றினை ஓர் ஆய்வுமுறையாகப் பரவலாக அறிமுகம் செய்தல்
- ஆய்வாளர்களைப் பயிற்றுவித்தல்
- வாய்மொழி வரலாற்று ஆய்வுகளை மேற்கொள்ளல்
- வாய்மொழி வரலாற்றுப் பதிவுகள், ஆய்வுகள் தொடர்பான வெளியீடுகள்
- இச் செயற்பாடுகளில் உள்ள தடைகளை, வாய்ப்புக்களை, அனுபவங்களை, கற்றல்களைப் பகிர்தல்.

## செயற்பாடுகள்

- உபகரணங்கள், சீர்திருத்தங்கள் , முறைமைகளைத் திட்டமிடல்
- ஆர்வமுள்ள தன்னார்வலர்களை அடையாளங்கண்டு பயிற்றுவித்தல்
- பதிவுசெய்யப்பட வேண்டிய ஆளுமைகளை அடையாளங் காணுதலும் ஆய்வுக்குட்படுத்தலும்
- வாய்மொழி வரலாற்றுப் பதிவுகளை மேற்கொள்ளல்
- பதிவுகளை இனையமேற்றுதல்
- காப்புப்படிகளைப் பாதுகாத்தல்
- ஆய்வுகளைத் திட்டமிடல்
- ஆய்வுகளுக்கான வளங்களைத் திரட்டுதல்

## வரவு செலவு

- செயற்றிட்டத்துக்கான அடிப்படைச் செலவுகளுக்கு ஆண்டுக்கு 5 இலட்சம் வீதம் 25 இலட்சம் ஒதுக்கப்படும். மேலதிக நிதி ஆய்வுசார் ஆவணப்படுத்தலுக்கான செயற்றிட்ட முன்மொழிவுகள் ஊடாகப் பெறப்பட்டன.
- செயற்றிட்டத்திற்கு தேவையான உபகரணங்கள் வாங்கியமை
- தி. கோபிநாத் மற்றும் அவரது நண்பர்கள் சிலர் அடிப்படைச் செலவுகளைப் பொறுப்பெடுத்தனர்.

## அடைவுகள்

- வாய்மொழி வரலாறுகளைச் சேகரித்தல் எனும் வகைப்பாட்டினுள் 479 வாய்மொழிவரலாறுகள் பெறப்பட்டன.
- மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் ஆவணப்படுத்தல் மற்றும் வாய்மொழி வரலாற்றாக்கம் தொடர்பான பயிற்சிப்பட்டறைகளை 3 நடாத்தப்பட்டன.

- வவுனியா, மலையகம் மற்றும் மட்டக்களப்பு சார்ந்து பல்வகைத்தனமைக்காக ஈழத்து சஞ்சிகை ஆசிரியர்கள் தொடர்பான வாய்மொழித்தகவல்கள் பெறப்பட்டன.
- அவற்றுக்கான ஐதீபன், பிரபாகரன், பரணிதரன், விதூசன், டெல்டன், கன்ஸகௌரி, லுனுகலசிறி ஆகியோருக்கு பயிற்சி வழங்கப்பட்டமை போன்ற விடயங்களுடன் தொடர்புடையதாக இச்செயற்றிட்டம் அமைந்தது.

## எதிர்கொண்ட சவால்கள்

- நூலக நிறுவனத்தின் பல்லூடக ஆவணப்படுத்தலுக்கான சீர்தரங்கள் பின்பற்றப்படும். நடைமுறையில் கிடைக்கக்கூடிய prosumer தர ஒலி ஒளிப்பதிவுக் கருவிகளைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய அதியுயர் தரத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- வாய்மொழி வரலாறுகள் பதிவிடும் போது அதற்கான அனுமதிப் படிவங்கள் உரிய வகையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்
- நூலக நிறுவனத்தின் வாய்மொழி வரலாற்றாக்கம் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.